★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 85690

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The official organ of the D.P.F.

கிராம மின்சாரத் திட்டங்கள்

ரூ. 75 கோடி ஒதுக்கப்படுகிறது?

கிராமங்களுக்கு மின்சார வசதி செய்து தரும் திட்டங்களுக்காக டில்லி சர்க்கார், இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் ரூ 75 கோடி செலவிடத் திட்டமிட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

கிராமங்களுக்கு மின்சார வசதி தருவதற்காக, மாநில சர்க்காரின் திட்டங்களுக்கு மானிய உதவி தருவது பற்றியும் டில்லி

(4-ம் பக்கம் பார்க்க)

மலர் 3] சென்னை: பங்குனி 29உ புதன் (11—4—56) ★ ★ வெளியீடு: பங்குனி 30உ வியாழன் (12—4—56) [இதழ் 256

தென்னுட்டை வடநாடு வஞ்சிக்கவில்லையாம்!

தொழில் நிர்மாணத்தில் நீதி வழங்கப்பட்டிருக்கிறதாம்!

அலுமினிய தொழிற்சாலை துவங்கக்கேட்பது கூடாதாம்!

தெற்கை வடக்கு அலட்சியப்படுத்துகிறது என்ற குமுறல் வெறும் அபவாதமாம்!

கனம் காமராசர் ஊளையிடுகிறார்

ஒசூர், ஏப். 10—

"தொழில்களைத் துவங்குவதில், தென்னுட்டை, மத்திய அரசாங்கம் புறக்கணித்து வருகிறது எனச் சிலர் அச்சங் கொண்டுள்ளனர். அத்தகைய அச்சத்திற்கு ஆதாரமே கிடையாது.

"ஒவ்வொரு பகுதியிலும் இருக்கிற மக்கள், ஆங்காங்கே உள்ள இயற்கைச் சாதனங்களைப் பயன்படுத்தி, சிறிய பெரிய தொழில்களைத் துவங்க வேண்டுமெனக் கோருகின்றனர். எடுத்துக்காட்டாக, இப்பகுதியில் உள்ளவர்கள் அலுமினியத் தொழிற்சாலையை நிறுவக் கோருகின்றனர். அவர்களை, நான் பொறுமையாக இருக்கக் கேட்டுக் கொள்ளுகிறேன். பற்பல சிறிய தொழில்களைத் துவங்குவதற்குக் காங்கிரஸ் அரசாங்கம் திட்டமிட்டிருப்பதுடன், பெரிய தொழில்களைக் கூட நிர்மாணிப்பதற்கு திட்டமிட்டிருக்கிறது."

இவ்வாறு கூறியுள்ளார்—இங்கு ஒரு காங்கிரஸ் கூட்டத்தில் பேசிய முதலமைச்சர் கனம் காமராசர் அவர்கள்.

அவர் மேலும் தனது பேச்சில் குறிப்பிட்டுள்ளதாவது :—

"பெரம்பூரில் புகை வண்டிப் பெட்டிகள் தயாரிக்கும் தொழிற்சாலை ஏற்கனவே துவங்கப்பட்டு இருக்கிறது.

"நிலக்கரி வெட்டி எடுப்பது நெய்வேலியில் தொடங்கப்பட்ட உடன், இந்தியத் தொழில் படத்தில், சென்னை குறிப்பிடத் தகுந்த இடத்தைப் பெற்றுவிடும். எனவே, தெற்கை வடக்கு அலட்சியப் படுத்துகிறது எனக் குறை கூறி வருவதை நிறுத்த வேண்டும்."

* * *

குறிப்பு: கனரகத் தொழில்களைத் துவங்குவதில் இந்தியப் பேரரசு சென்னையை அலட்சியப்படுத்தி இருக்கிறது என்று குறிப்பிட்டு, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கியுள்ளத் தொகையை மேலும் கூட்ட வேண்டுமென அரசாங்கச் சார்பில் சென்னை சட்டசபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் சிந்திக்கத் தக்கது.

அரசாங்கத்தின் மூலத் தீர்மானத்திற்கு, கனரகத் தொழில்களை இங்குத் துவங்க வேண்டுமெனக் கோரும் திருத்தத்தை ஒரு காங்கிரஸ் உறுப்பினரே கொண்டுவந்து, ஆவடியில் துவங்க இருந்த கனரக மின்சாரக் கருவிகள் உற்பத்திச்சாலை போபால் பகுதிக்கு மாற்றப்பட்டு விட்டதைக் கூறி வருந்திப் பேசியுள்ளதும், அத்திருத்தத்துடன் அரசாங்கத் தீர்மானம் நிறைவேறி இருப்பதும் கருத்தக்கது.

கடந்த 6—4—56 அன்று, தென்னிந்திய வர்த்தகக் கழகக் கூட்டமொன்றில் பேசிய இதே காமராசர்,

"இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் சென்னை மாநிலத்தில் எந்த ஒரு பெரும் தொழிலும் துவங்க உத்தேசிக்கப்படவில்லை என்பது உண்மைதான் ;

"சென்னை சர்க்கார் தங்களாலியன்றவரை டில்லி சர்க்காரை வற்புறுத்தி வருகின்றனர்—ஏதேனும் பெரும் தொழிலை இங்கு துவங்குமாறு,"

என்று குறிப்பிட்டிருக்கிறார்; எல்லா இதழ்களிலும் இந்தப் பேச்சு வெளிவந்திருக்கிறது; இதுவும் நினைவு கொள்வதற்குரியதாகும்.

'சென்னையில் கனரகத் தொழில்களைத் துவங்கும் வகையில், தேவிகுளம் — பீர்மேடு விவகாரத்தில் நடந்துகொண்டதுபோல் நடந்துகொள்ளமாட்டேன் என, அரசாங்கச் சார்பில் தீர்மானத்தைக் கொண்டு வந்த நிதி அமைச்சர் கூற்றும் கருத்தக்கது.

இதுபற்றி, மேல்சபையிலும், கீழ் சபையிலும் நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்ட காங்கிரஸ், எதிர்க்கட்சி உறுப்பினர்களின் காரசாரமான உரைகளுடன், முதலமைச்சரின் ஊளையையும் ஒப்பிட்டுப் பார்த்து முடிவு கட்டிக்கொள்வது நலம்.

'சுபாஷ் சந்திர போஸ் இறந்தது உண்மையே'

'அவர் ஈமச் சடங்கை நானே நடத்தினேன்'

கர்னல் ரகிமான் கூறும் உண்மை

புதுடெல்லி, ஏப். 10—

"18—8—1945-ல் சுபாஷ் சந்திர போஸ் ஏறிச்சென்ற ஆகாயவிமானம் பார்மோசா தீவில், டாய் ஆகு எனுமிடத்தில் விழுந்து நொறுங்கி விட்டது. விமான விபத்தில் சிக்கி படுகாயமுற்ற போஸ் அவர்களுக்கும், எனக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுவந்த மருத்துவமனையிலேயே சிகிச்சை தரப்பட்டது. போஸ் அவர்கள் இறந்ததும், அவருடைய எஞ்சிய சவத்திற்குச் செய்ய வேண்டிய இறுதிச் சடங்கை நானே செய்தேன்."

இவ்வாறு சாட்சியம் கொடுத்துள்ளார், சுபாஷ் போஸ் மரணம்பற்றிய ஓர் சாட்சியாகக் கொள்ளப்படும் கர்னல் ரகிமான் என்பவர்.

போஸ் மரணம் பற்றிய விசாரணைக் குழு முன், போசுடன் நெருங்கி இருந்து, இந்திய தேசிய சேனையில் பணியாற்றியவரும், தற்பொழுது பாகிஸ்தான் அரசாங்கத்தில் பணிபுரிந்து வருபவருமான கர்னல் அபிபுர் ரகிமான் என்பவர் மேற்குறித்துள்ளபடி கூறியுள்ளார்.

அதே விசாரணைக் குழு, போஸ் இன்னும் உயிருடன் இருந்து வருகிறார் என்றும், தம்முடன் கடிதப் போக்குவரத்து நடத்தி வருகிறார் என்றும் எப்பொழுதும் பேசிவரும் முத்துராமலிங்கத்தேவர் அவர்களையும், சாட்சியங்கூற அழைத்தது.

ஆனால், முத்துராமலிங்கரோ, யுத்தக் குற்றவாளி என போஸ் அறிவிக்கப்பட்டு இருப்பதால், குழு முன் சாட்சியம் கூற தாம் விரும்பவில்லை எனக் குறிப்பிட்டு, அழைப்பை ஏற்க மறுத்து விட்டார்.

போஸ் அவர்களை ஒரு போர்க் குற்றவாளியாக எப்பொழுதும் அறிவிக்கப்பட்டது கிடையாது என்றும், குற்றவாளிப் பட்டியலில் அவர் பெயர் சேர்க்கப்பட்டதும் கிடையாது என்றும் குழு குறிப்பிட்டுவிட்டு, மீண்டும் சாட்சியம் கூறும்படி முத்துராமலிங்கரை அழைத்திருக்கிறது.

உ. பி. ஆதிக்கபுரியினரின் மண்ணாசை!

மேலும் பிரதேசங்கள் வேண்டுமாம்

மண்டலக் குழுவை எதிர்க்கிறார் முதன் மந்திரி

லக்னோ, ஏப். 9—

பாகல்கண்டு, மற்றும் உத்திரப் பிரதேசத்தை அடுத்துள்ள விந்தியப் பிரதேச மாநிலத்தின் சில பகுதிகள் உத்திரப் பிரதேசத்துடன் சேர்க்கப்பட வேண்டும் என்று அந்த மாநில முதன் மந்திரி கூறியிருக்கிறார்.

மாநில சட்டசபையில் புது அமைப்பு மசோதா குறித்து விவாதிப்பது என்ற தீர்மானத்தை முன்மொழிந்து பேசிய அவர், அந்தப் பிரதேசங்கள் எல்லாம் பூகோளத் தொடர்பு, கலாச்சாரத் தொடர்பு, சமூகத் தொடர்பு ஆகிய காரணங்களுக்காக உத்திரப் பிரதேசத்துடன் சேர்க்கப்பட வேண்டுமென்றாராம்.

"உ. பி.-யின் பொருளாதார முன்னேற்றத்திற்காகவும், விந்தியப் பிரதேசம் அல்லது மத்தியப் பிரதேசம் இவ்விருந்து சில பிரதேசங்களைச் சேர்க்கவேண்டுவது அவசியமாகும். இப்படி அந்தப் பிரதேசங்களை உ. பி.-யுடன் இணைப்பதற்கு அந்தப் பகுதி மக்களின் அனுமதியும், சம்மதமும் நிச்சயம் இருக்கிறது"

என்றும், பேசினாராம், டாக்டர் சம்பூர்ணனந்த் !

"மண்டலக் குழுக்கள் அமைப்பதை உ. பி. சர்க்கார் ஆதரிக்கவில்லை. இவை அதிகமான செலவுகளைத்தான் கொண்டுவந்து சேர்க்கும். எந்த ஒரு நடைமுறை நிர்வாக வசதியையும் இந்த ஏற்பாடு பெற்றுத் தராது,"

என்றும், எதிர்ப்புத் தெரிவித்துப் பேசியிருக்கிறார் அந்த முதன் மந்திரி.

ஆசிரியப் பயிற்சிப் பள்ளி நிர்வாகக் குழுத் தலைவராக இரா. நெடுஞ்செழியன்

தேர்ந்தெடுக்கப்பட்டார்

இருங்களூர், ஏப். 8—

மார்ச் திங்கள் 14-ம் நாள் இருங்களூரில் நடைபெற்ற புதிய தரங்கை. ஆசிரியப் பயிற்சிப் பள்ளி நிர்வாகக் குழுக் கூட்டத்தில், தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் நிர்வாகக் குழு உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளப்பட்டதோடு, 1956—57 ஆகிய இரண்டு ஆண்டு காலத்திற்கு நிர்வாகக் குழுவின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் முழுமனதோடு இசைவு தந்து, ஆசிரியப் பயிற்சியின் வளர்ச்சிக்கு முழு ஒத்துழைப்பும், ஆதரவும் தருவதாக வாக்களித்தார்.

நிர்வாகக் குழுவின் இதர உறுப்பினர்கள்: தோழர்கள் உத்தமபுதூர் நடேசனார், அம்பில் பி. தர்மலிங்கம், ஜியார்ஜ் ஐசக் பி. ஏ, ஜோசப் முத்தரையர், வி. வரதப்பன், எஸ். கே. நாராயணசாமி, மிஸஸ் கே. சாமுவல் பி. ஏ, பி.டி., ரெவரண்ட் வி. ஜி. இராஜையா பி. ஏ., பி. டி.; (சிறுவன—நிர்வாகி—பள்ளித் தலைவர்) ஆகியோராவார்கள்.

(4-ம் பக்கம் பார்க்க)

'புகழ் விரும்பாத...!'

"என்னைப் பற்றிய புகழுரையை நானே கேட்க வேண்டியிருக்கிறது ; அப்படிக் கேட்க நான் விரும்பவில்லை ; இதற்கெல்லாம் எனக்கு நேரமில்லை ; பல முக்கியமான விஷயங்களை நான் கவனிக்கவேண்டும். நீங்கள் இங்கே என்ன செய்கிறீர்கள் என்பதில்தான் எனக்குக் கவலை,"

என்று பிரதம மந்திரி நேரு அலஹாபாத் நகரில் உள்ள நவீனதம் கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்தின் செயலாளர் தன்னை வரவேற்று, வரவேற்புப் பத்திரம் வாசித்துத் தரும்போது குறிப்பிட்டாராம்.

தன்னைப் பற்றி, தன் முன்னிலையிலே புகழுவது தனக்கு பெரும் கஷ்டத்தைத் தருவதாகக் கோபமாகக் கூறினாராம், நேரு.

'சோம்பேறிகள்' என்று வர்ணிக்கப்பட்ட சாதுக்கள்

சர்க்காரின் திட்டங்களுக்கு உதவப் போகிறார்களாம்

சாதுக்கள்—காவியுடை தரித்த சோம்பேறிகள் என்று வர்ணிக்கப்படுபவர்கள், மக்களுக்கு எழுத்தறிவும், சமூக அறிவும் புகட்டப் போகிறார்களாம். பூதான இயக்கத்தை வளர்க்கவும், இலஞ்சஊழலை ஒழிக்கவும்கூட அவர்கள் பாடுபடப் போகிறார்களாம்; இதற்காகத் திட்டம்கூடத் தயாராகி விட்டதாம். சர்க்காரும் இத்திட்டங்களுக்கு உதவிபுரிய சித்தம் தெரிவித்தாயிற்றாம்.

இந்த சாதுக்கள் ஒன்றுகூடி, அரித்துவாரத்தில் மாநாடு நடத்திஇருக்கின்றனர்!

வாழ்த்துக்கள்—டாக்டர் இராதாகிருஷ்ணன், பண்டித பந்த், தேபர், முன்ஷி, திவாகர் முதலியோரிடமிருந்து குவிந்திருக்கிறதாம்!

டெல்லி திட்ட மந்திரி நந்தா மாநாட்டில் கலந்துகொண்டிருக்கிறார்.

அஜ்மீர் முதன் மந்திரி ஹரிபாபு உபாத்தியாயா, சாதுக்களிடையே சொற்பொழிவாற்றியிருக்கிறார்.

வேறென்ன வேண்டும்? சோம்பேறிகள்—சோற்றுத் தடியர்கள் என்றழைக்கப்படுபவர்கள்கூட சர்க்காருக்கு ஆதரவாகப் பணிபல புரிய திட்டமிட்டு விட்டனர், சர்க்காரின் ஆசியோடு!

மாநாட்டில் பேசிய மந்திரி நந்தா, சாதுக்கள், நாட்டிற்கு—மக்களுக்கு எப்படி எல்லாம் பயன்பட முடியும்—பணிபுரிய இயலும் என்பது குறித்துப் பேசினாராம்.

'பாரத சாது சேவக் சமாஜ்'—அமைப்பில் அமைக்கப்பட்ட நிறுவனம்; அதுதான் இந்த சாதுக்கள் மாநாட்டை நடத்தினதாம்.

நந்தா பேசும்போது குறிப்பிட்டதாவது:—

"உண்மை, ஒற்றுமை குறித்தும், தன்னல மறுப்பு குறித்தும், சேவையே பிரதானம் என்பது குறித்தும், சாதுக்கள், மக்களிடத்தில் பிரச்சாரம் செய்ய முடியும்.

"நாட்டின் நலனுக்காக, சாதுக்கள், தங்களுக்கு மக்களிடத்தில் உள்ள செல்வாக்கை ஒன்று திரட்டித் தரமுடியும்.

"குறிப்பாக, சமூக, ஆத்மார்த்தத் துறைகளில் மக்களை நல்வழி நடத்திச்செல்ல தகுந்த தலைமை தேவைப்படுகிறது. அரசியல் தொடர்பற்ற சாதுக்கள் சமாஜம் அந்தத் தலைமையை ஏற்கமுடியும். 'சமாஜம்' மதச் சார்பற்றதாக இருக்கவேண்டும்; சாதிமத பேதங்களைப் பாராட்டாது மக்களுக்கு, சேவைபுரிய வேண்டும்.

"அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு, சாதுக்கள் மக்களின் ஒத்துழைப்பை ஒன்று திரட்டித் தரமுடியும்.

"சமாஜத்தின் நியாயமான அபிலாஷைகளைப் பூர்த்தி செய்ய சர்க்கார் உதவி தரும் என்று உறுதி கூறுகிறேன்."

இந்தியாவெங்கிலுமிருந்து சுமார் 400 சாதுக்கள்வரை அந்த மாநாட்டில் கலந்து கொண்டனராம்.

மகளிர் நெறி தவற காரணம் என்ன?

மத்திய அமைச்சர் விளக்கம்

"சில சமூக, பொருளாதார காரணங்களால்தான், சில பெண்கள், நெறி தவறிய வாழ்க்கையை நடத்தவேண்டிய கீழ்ப்பத்திற்கு ஆளாகிவிடுகின்றனர். இப்பிரச்சினைக்கான மூல காரணத்தின்மீது அதிகக் கவனம் செலுத்த வேண்டும். நெறி தவறிச் செல்லும் பெண்களை வெறுப்பதினால் என்றைக்குமே பயன் ஏற்பட்டுவிட முடியாது" என்று, மத்திய அமைச்சர் பண்டித பந்த் அவர்கள், புதுடில்லியில் நடைபெற்ற பெண்கள் பாதுகாப்பு லீகின் முதலாவது மாநாட்டிற்குத் தலைமை தாங்கிப் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

"இந்தத் நிலைமைகள் வளர்ந்து விட்டன; சமூகத்தின் துர்பாக்கிய நிலையிலுள்ள இப்பெண்கள் மீது இன்னும் சற்று அனுதாபமும், சகிப்புத் தன்மையும் மக்கள் காட்டினால், இப்போதும்கூட இந்தத் நிலைமைகளை நீக்கிவிடலாம்" என்றும் குறிப்பிட்டார்.

இப்பெண்களில், சமூகமான வாழ்க்கை நடத்த விரும்புகிறவர்களைத் திருமணம் செய்துகொள்ள இளைஞர்கள் முன்வர வேண்டுமென அவர் கேட்டுக்கொண்டார்.

மூன்றும் பிரிவு குமாஸ்தாக்களுக்கு!

டில்லி தரும் சம்பள உயர்வு

புதுதில்லி, ஏப். 10—

டில்லி சர்க்காரின் பல்வேறு இலாகாக்களிலும் பணிபுரியும் மூன்றாம் பிரிவுக் குமாஸ்தாக்களுக்கு, டில்லி சர்க்கார், அடிப்படைச் சம்பளத்தில் உயர்வு தரச் சம்மதித்திருப்பதாகத் தெரியவருகிறது.

டில்லிக்கு ஆண்டொன்றுக்கு ஒன்றரைக் கோடி செலவாகக் கூடிய அளவு மட்டுமே சம்பள உயர்வு இருக்குமாம்.

இது குறித்து, உள்நாட்டமைச்சர் சீக்கிரமே அறிவிப்பாராம்.

இப்போது, இந்த மூன்றும் பிரிவு குமாஸ்தாக்கள் அடிப்படைச் சம்பளமாக ரூ. 55 பிரதி மாதம் பெற்று வருகின்றனர்.

இந்தச் சம்பள உயர்வினால், சர்க்காருக்கு ஆண்டிற்கு 1½ கோடி செலவாகுமென்பது தெரிகிறது.

1947 மே மாதம் ஆரம்பிக்கப்பட்ட நிலக்கரிச் சுரங்கங்களின் பிராவிடன்ட் நிதித் திட்டத்தில், இப்பொழுது மொத்தம் சுமார் 3,20,000 சுரங்கத் தொழிலாளர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். திட்டத்துக்கு 1956-ம் ஆண்டு பிப்ரவரிவரை கிடைத்துள்ள தொகை மொத்தம் ரூ.5,50,00,000 ஆகும்.

'இருட்டறை'—நாடகம்

13—4—56 இரவு 10-30 மணிக்கு, காரைக்குடி ஐந்துவிளக்கு எதிரிப்புறம் அமைந்த அண்ணா கலை அரங்கில், தோழர் கண்ணதாசன் தலைமையில், வள்ளுவர் நாடகக் குழுவினரால், 'இருட்டறை' எனும் சமூக நாடகம் நடைபெறும்.

'தீச்சுடர்'

'தீச்சுடர்'—மே திங்கள் மூன்றாம் நாள் வியாழக்கிழமையிலிருந்து வெளியிடுவதற்கான ஏற்பாடுகள் முடியும் நிலையிலிருக்கிறது. ஏஜெண்டு நிபந்தனைத் தாள்களைக் கேட்டு எழுதியிருக்கும் தோழர்களுக்கு ஏப்ரல் 16-ந் தேதி 'பாரங்களை' அனுப்பிவைக்கப்படும். அதில் விளக்கங்கள் தரப்பட்டிருக்கிறது. அதன்படி 'பாரத்தை'ப் பூர்த்திசெய்து டிபாசிட் தொகையை கீழ்க்காணும் அலுவலக முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டுகிறேன்:—

சி. பி. சிற்றரசு, ஆசிரியர், 'தீச்சுடர்', 31, தையப்ப முதலி தெரு, சென்னை 1.

கிராம மின்சாரத்.........

(-1ம் பக்கத் தொடர்ச்சி)

யோசித்துக் கொண்டிருக்கிறதாம்.

இந்த தகவலை உதவித் திட்ட மந்திரி ஜெய்சுக்லால் ஹாதி என்பார் மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

மாநிலச் சர்க்கார்களின், கிராம மின்சாரத் திட்டங்களுக்காக, தனி இலாகாக்களை நிறுவியிருப்பதாயும் அந்த மந்திரி தெரிவித்திருக்கிறார்.

சுதந்திரம் பெறும்.........

(2-ம் கலத்தின் தொடர்ச்சி)

அங்கு நடைபெற்ற சுதந்தர இயக்கங்களின் விளைவாக இப்போது ஜனநாயக உணர்ச்சி ஆழமாகப் பதிந்துள்ளது; எனவே, விடுதலையைத் தொடர்ந்து, அங்கு மக்கள் விருப்பப்படி ஜனநாயக சர்க்கார் ஏற்படக்கூடும்.

கழகக் கூட்டம்

★

மேக்கிரிமங்கலம்:

12-4-56 மாலை 5-30 மணிக்கு

தலைவர்: கே. ஜி. சாரங்கபாணி

பேசுவோர்: சி. பி. சிற்றரசு, என். சிட்டப்பா, இரே. இராசமாணிக்கம், கோ. சி. மணி

★

மணப்பாறை:

13—4—56 மாலை 6 மணிக்கு

தலைவர்: மா. இளங்கீரன்

பேசுவோர்: ஏ. வி. பி. ஆசைத்தம்பி, காசிநாதன், என். வடிவேலன், மணிமாறன்

இன்னிசை உண்டு

சென்னை மாவட்ட தி. மு. க. செயற் குழு உறுப்பினர்களுக்கு:

★

"13—4—56 பிற்பகல் 2 மணியளவில், இராயபுரம் 'அறிவகத்'தில் நடைபெறும் செயற் குழுவில், திராவிடர் திருநாள் வரவு-செலவும், மாவட்ட வரவு-செலவும், மே விழாவும், மாநில மாநாடும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருப்பதால் மாவட்ட உறுப்பினர்கள் அனைவரும் தவறுமல் கலந்துகொள்ளும்படிக் கேட்டுக்கொள்ளுகிறேன்," என்று, சென்னை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் இளம்பரிதி அறிவிக்கிறார்.

சட்டசபைக்குள் ஆர்ப்பாட்டம்

எட்டு பேருக்கு 15 நாள் சிறைத் தண்டனை

நிலப் பிரபுக்களின் கையாட்களுக்கு நேர்ந்த கதி

ஜெய்ப்பூர், ஏப். 10—

பூசுவாமிகள், சிறு சிறு நிலப் பிரபுக்களின் கையாட்கள் 8 பேர் வரை 15 நாள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருக்கின்றனர்.

இவர்கள் சட்டசபைக்குள் பார்வையாளர் 'காலரி'யில் அமர்ந்து கொண்டு, சபை வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தபோது, சர்க்காருக்கு விரோதமான கோஷங்களை எழுப்பியதோடன்றி, வேகமாக சபைத் தலைவரின் இடத்தை நோக்கிப் பாயவும் முற்பட்டிருக்கின்றனர். போலீசாரும், சட்டசபைக் காவலரும் இவர்களைப் பிடித்துக்கொண்டனர்.

உடனே முதன் மந்திரி, இவர்களுக்கு 15 நாள் சிறைத்தண்டனை தரவேண்டுமெனத் தீர்மானம் கொண்டுவந்தார். தீர்மானம் ஒரு மனதாக நிறைவேறியது. எட்டு பேர் சிறை சென்றனர். ஒருவர், மன்னிப்புக் கோரியதால் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்.

முதன் மந்திரி தீர்மானத்தைக் கொண்டு வந்து பேசியதாவது:—"நடைபெற்ற சம்பவம் வருந்தத்தக்கதாகும்; ஏனெனில், சம்பவம் ஜனநாயகத்தின் அடிப்படையையே தாக்குவதாகும்; சபையை அவமதிப்பதாகும். இந்தச் சபை, ஏதும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுவதற்காக அமைக்கப்பட்டது அல்ல; சபைக்கு தனக்கு என ஒரு கௌரவம் உண்டு; அது காப்பாற்றப்பட வேண்டும்."

தீர்மானத்தை ஆதரித்துப் பேசிய எதிர்க்கட்சித் தலைவர், 'சம்பவம் வருந்தத்தக்கதுதான். உடனடியாக விசாரணை நடைபெறுவதும் பாராட்டத்தக்கது'மென்று குறிப்பிட்டிருக்கிறார்.

இதற்கு முன்பாக, ஒன்பது ஆர்ப்பாட்டக்காரர்களும் ஒருவர்பின் ஒருவராக, தனி காலரி ஒன்றிற்கு அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டனர். ஆறு பேர்கள், பூசுவாமிகளின் நிலையை சர்க்காருக்கு உணர்த்துவதற்காக சபைக்குவந்து கோஷமிட்டதாக ஒப்புக் கொண்டனர். இருவர், சபைக்குவெளியே இருந்து கோஷங்களை எழுப்பியதாகக் கூறினர். ஒருவர் மன்னிப்புக் கேட்டுக்கொண்டார்.

எட்டுபேர்கள் மட்டும் சிறைக்கு அனுப்பப்பட்டனர்.

தோட்டத் தொழிலாளர் பட்டினிப் போராட்டம்

12 பேர்கள் மருத்துவமனையில்!

சமரசப் பேச்சுக்கள் முறிவு?

குன்னூர், ஏப். 9—

அதிகமான போனஸ் கோரி, நீலகிரி தோட்டத் தொழிலாளர்கள் மேற்கொண்டுள்ள பட்டினிப் போர் இன்று பதினேழாவது நாளை அடைந்திருக்கிறது. பட்டினிப் போரில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளரில் சுமார் 12 பேர்வரை, உடல் நலம் கெட்டு, மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்கின்றனராம்.

முன்பே மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டபட்டினிப்போர் வீரர்கள் மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டதும், மீண்டும் பட்டினிப் போரைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர் என்று தெரிகிறது.

தோட்ட முதலாளிகள் பிரதிநிதிகளுக்கும்—தொழிலாளர் பிரதிநிதிகளுக்கும் இடையில் நடைபெற்ற சமரசப் பேச்சுவார்த்தைகள் முறிந்து விட்டதாகத் தெரியவருகிறது.

தொடர்ந்து, போராட்டம் அமைதியாகவே நடைபெற்று வருகிறது.

பாகிஸ்தான் பதில்!

கட்ச் பகுதியில், ராண் என்ற ஒரு பிரிவு தங்களுக்குச் சொந்தமானது என்று பாகிஸ்தான் சர்க்கார், இந்திய சர்க்காரிடம் கோரிக்கை தெரிவித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

ராண் பிரதேசத்தில் பாகிஸ்தான், தொடர்ந்து தகராறு விளைவித்துக் கொண்டிருக்கிறது என்று மே 1955-ல் இந்தியா அனுப்பிய ஆட்சேபக் குறிப்பிற்குப் பதில் அனுப்பும் வகையிலேயே டெல்லிக்கு கராச்சி மேற்கண்ட பதிலை அனுப்பியுள்ளதாம்.

பாகிஸ்தான் 11 மாதங்களுக்குப் பிறகு ஆட்சேபத்திற்கு பதிலளித்திருக்கிறதாம்.

ஏஜெண்டுகள் தேவை

கீழ்க்கண்ட இடங்களில் 'நம் நாடு' இதழ்களை விற்பனை செய்ய முன்பணம் கட்டக் கூடிய பொறுப்புமிக்க ஏஜெண்டுகள் தேவை:—

- திருநெல்வேலி
- காஞ்சீபுரம்
- யாழ்ப்பாணம்
- இராசபாளையம்
- திசையன்விளை

ஆசிரியப் பயிற்சி......

(முதல் பக்கத் தொடர்ச்சி)

அன்று காலையில் பயிற்சிப் பள்ளித் தலைவர் தோழர் வி. ஜி. இராசையா அவர்களின் உருவப் படத்தைத் திறந்துவைக்கும் விழாவில் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் கலந்துகொண்டார்கள். விழாவிற்குத் தமிழாசிரியர் தலைமை வகித்தார்.

நண்பகலில் நிர்வாகக் குழு கூடி சில தீர்மானங்களை நிறைவேற்றியது.

மாலையில் பயிற்சிப் பள்ளித் தலைவர் தோழர் வி. ஜி. இராசையா அவர்கள் தலைமையில் நடந்த சிறப்புக் கூட்டத்தில் தோழர்கள் அண்ணு, நெடுஞ்செழியன், ஈ. வெ. கி. சம்பத் ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள். தோழர்கள் என்.எஸ்.இளங்கோ, அ. பொன்னம்பலனர், அம்பில் தர்மலிங்கம், எம். எஸ். மணி ஆகியோர் கூட்டத்திற்குச் சிறப்பாக வருகை தந்திருந்தனர்.

மாணவர்களும், தலைவர்களும் அடங்கிய நிழற் படங்கள் பல எடுக்கப்பட்டன. (க. கி)

நாடகத் துவக்க விழா

சென்னை கண்ணன் கலாமன்றத்தின் 'பலி பீடம்' என்ற நாடகத் துவக்க விழா தோழர் சி ஆர். பாலசுந்தரம் தலைமையில், 13—4—56 மாலை 3 மணியளவில், சென்னை, பெத்துநாய்க்கன் பேட்டை, கிருஷ்ணப்ப நாய்க்கன் குளத் தெரு, எண் 7 இல்லத்தில் நடைபெறும்.

சொற்பயிற்சிக் கூட்டம்

13—4—56 மாலை 6½ மணிக்கு, எண் 17, சாலைவிநாயகர் கோயில் தெரு, சென்னை—1 முத்தமிழ் மன்றப் பணிமனையில், தோழர் என். இராமதாசன் தலைமையில், 'அரசாங்கம்' எனும் பொருள் பற்றி சொற்பயிற்சிக் கூட்டம் நடைபெறும். மன்றத் தோழர்களும்; மற்றும் பலரும் பேசுவர்.

இராயபுரம் இலக்கிய மன்றம்

13—4—56 காலை 9 மணியளவில், பனைமரத்தொட்டி, சிவசுப்பிரமணிய கோயில் மண்டபத்தில், குறள் சிறப்புச் சொற்பொழிவுகள் தோழர் நாராணதுரைக்கண்ணன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் ஏ. ஞானசுந்தரம், அம்பை-இரா. சங்கரன், ம. இராசமாணிக்கம், வே கபிலன் ஆகியோர் பல தலைப்புகளில் பேசுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத் துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.